IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.125/2017

Deposition of Witness : PW-1

Name : பலராமன்

Father's Name /W/o : த/பெ. தக்காளி

Religion : இந்து

Caste : வன்னியர்

Calling : விவசாயம்

Address : தக்கோலம் கிராமம், அரக்கோணம் வட்டம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 21.11.2023

குறுக்கு விசாரணை.

1. வாதி என்னுடைய தாயார் ஆவர். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருடைய தந்தை சொத்து வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார். என்ன சொத்திற்காக போட்டுள்ளார் என்றால் வீடு மற்றும் நிலத்திற்காக போட்டுள்ளார். அந்த வீடு மற்றும் நிலம் தாத்தாவின் சொத்து என்று வழக்கு போட்டுள்ளாரா என்றால் ஆம். என் தாத்தா பெயர் சுப்புராய ரெட்டி. என் தாத்தாவிற்கு எத்தனை மனைவி என்றால் இரண்டு. தனம்மாள் மற்றும் தனபாக்கியம். தனம்மாள் முதல் மனைவி என்றால் ஆம். தக்காளியம்மாள் என்று ஒரு மனைவி இருந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தக்காளியம்மாள்க்கும் சுப்புராய ரெட்டிக்கும் பிள்ளைகள் இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதில் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என் தாயாருக்கு தான் அனைத்து விவரங்களும் தெரியும் என்றால் என் தாயார் என்னிடம் சொல்லியதை தான் நான் சொல்கிறேன்.

2. என் தாயார் எனக்கு எப்போது இந்த விவரங்களை சொல்லியுள்ளார் என்றால்

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே சொல்லியுள்ளார். அபிமன்யு, மாசலா, நவநிதம், இந்திராணி, ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. பதிலில் இவர்களை பற்றி சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. தனபாக்கியம்மாளுக்கு பிள்ளைகள் உள்ளார்களா என்றால் இல்லை. தனபாக்கியம்மாள் பழனிவேலுக்கு தாவா சொத்து குறித்து செட்டில்மெண்ட் எழுதியுள்ளார் என்றால் இல்லை. என் தாயார் என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் செட்டில்மெண்ட் எழுதியதாக ஊரில் பேசியதை வைத்து வழக்கு போட்டுள்ளார்.

3. என் பாட்டி தனம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. என் தாத்தா என் பாட்டி பெயரிலும், என் பெரியம்மா தனபாக்கியம் பெயரிலும் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் இல்லை. உயில் எதுவும் எழுதவில்லை என்று என் தாயார் சொன்னரா என்றால் என் பாட்டியும் என்னுடன் இருந்த போது தாத்தா உயில் எழுதியதாக சொல்லவில்லை. 13.07.1988 ல் உயில் எழுதி வைத்துள்ளார் என்றாலும் அந்த உயில் முன்னிலைக்கு என் பாட்டி தனம்மாள் மற்றும் தனபாக்கியம் காலம் வரையில் அனுபவித்து அந்த சொத்தை என் மாமா பழனிவேலுக்கு அடைய வேண்டியது என்று உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்து வீட்டில் யார் உள்ளார்கள் என்றால் யாரும் இல்லை. பாழடைந்து விட்டது. தளம் போட்ட வீடு உள்ளதா என்றால் இல்லை ஓடு போட்ட வீடு தற்போது இடிந்து உள்ளது. மாமாவும் இல்லை நாங்களும் இல்லை. வா.சா.ஆ. 1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ளப்படி தான் சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆம். உயில் அடிப்படையில் தான் தனபாக்கியம் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதியுள்ளார் என்றாலும் எனக்கு அந்த விவரம் தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் அவ்வாறு உயில் எதுவும் இல்லை. முதல் மனைவியான தக்காளியம்மாள் வாரிசுகள் சேர்க்காமல் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. உயில் முன்னிலைக்கும் செட்டில்மெண்ட் முன்னிலைக்கும் சொத்து 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது

என்றாலும் அதை பாகம் பிரிவினை செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் கொடுத்துள்ள சொத்து விவரம் தவறானது என்றால் இல்லை. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.